ஓம்
சிவமயம்

# மலேசிய அருள்நெறித் திருக்கூட்டம்
## கோலாலும்பூர்

அருள்நெறி நிலையம் 17, ஜாலான் செக்கோர், ஆஃப் ஜாலான் ஹலிமாதோன்,
3வது மைல் ஜாலான் கிள்ளான் லாமா, 58000 கோலாலம்பூர்

தலைவர் : 012-363 3446
செயலாளர்: 019-359 3860

# திருநாவுக்கரசு நாயனார் குருபூசை
## 17-05-2026 (ஞாயிற்றுக்கிழமை)

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ ஒருகுலமுஞ் சுற்றமும் ஓரூ ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்று வாய்நீ துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் தும்நீ இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

தனித்திருத்தாண்டகம், பதிகம் 95, பாடல் 1

அருள்நெறிச் செல்வர்களே, வணக்கம்!

நிகழும் மங்களகரமான **பராபவ ஆண்டு, வைகாசி மாதம் 3 ஆம் நாள்** (ஆங்கிலம் 17-05-2025) **ஞாயிற்றுக்கிழமை காலை மணி 9.00** முதல் அருள்நெறி நிலையத்தில் **"திருநாவுக்கரசு நாயனார் குருபூசை"** சித்தாந்தக் கலாநிதி, சைவசிகாமணி, **முனைவர் க. திலகவதி** அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெறும். மெய்யன்பர்கள் அனைவரும் தவறாமல் வருகை புரிந்து சிறப்பிப்பதுடன், சொற்பொழிவுகளையும், திருமுறை இன்னிசை நிகழ்வுகளையும் கேட்டுப் பயனுறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

### நிகழ்வுக் கொத்து

| | | |
|---|---|---|
| காலை மணி 9.00 க்கு | : | கூட்டுப் பிரார்த்தனை |
| காலை மணி 10.00 க்கு | : | தலைமையுரை |
| காலை மணி 10.10 க்கு | : | திருத்தொண்டர் தொகை ஓதுதல். |
| காலை மணி 10.20 க்கு | : | திருமுறை இன்னிசை - **திருமுறைச் செல்வர் துரை கலியபெருமாள் அவர்களின் மாணவிகள்.** |
| காலை மணி 11.00 க்கு | : | சொற்பொழிவு - **சிவத்திரு. இரா. வெங்கடரமணி** அவர்கள், தலைப்பு : **"தனித் திருத்தாண்டகம்"** |
| மதியம் மணி 12.30 க்கு | : | தலைவர் நிறைவுரை |
| மதியம் மணி 1.00 க்கு | : | நன்றியுரை, தீபாராதனை; மாகேஸ்வர பூசை. |

**உபயம் : திரு. இரா. பாலகிருஷ்ணன் மற்றும் குடும்பத்தினர்**

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**

இக்கண்,
செயலவையின் ஆணைப்படி
**ச. மனோகரன்**